# பெப்ரவரி – 16 – சனி

## புனித ஒனேசிமுஸ்

**"நான் இம் மக்கள் கூட்டத்தின் மீது பரிவுகொள்கிறேன்". *மாற். 8:2***

## முதல் வாசகம் : தொடக்க நூல் 3 : 9 – 24

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, "நீ எங்கே இருக்கின்றாய்?" என்று கேட்டார். "உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன்" என்றான் மனிதன். "நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ?" என்று கேட்டார். அப்பொழுது அவன், "என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்" என்றான். ஆண்டவராகிய கடவுள், "நீ ஏன் இவ்வாறு செய்தாய்?" என்று பெண்ணைக் கேட்க, அதற்குப் பெண், "பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்" என்றாள். ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம், "நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப் பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" என்றார். அவர் பெண்ணிடம் "உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன் வேதனையில் நீ குழந்தைகள் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்" என்றார். அவர் மனிதனிடம், "உன் மனைவியின் சொல்லைக் கேட்டு, உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து நீ உண்பாய். முட்செடியையும் முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும். வயல் வெளிப் பயிர்களை நீ உண்பாய். நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்" என்றார். மனிதன் தன் மனைவிக்கு "ஏவாள்" என்று பெயரிட்டாள் ஏனெனில் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய். ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார். பின்பு ஆண்டவராகிய கடவுள், "மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவர் போல நன்மை தீமை அறிந்தவன் ஆகிவிட்டான். இனி அவன் என்றென்றும் வாழ்வதற்காக, வாழ்வின் மரத்திலிருந்தும் பறித்து உண்ணக் கையை நீட்டிவிடக் கூடாது" என்றார். எனவே ஆண்டவராகிய கடவுள் அவன் உருவாக்கப்பட்ட அதே மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார்.இவ்வாறாக, அவர் மனிதனை வெளியே துரத்திவிட்டார். ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே வாழ்வின் மரத்திற்குச் செல்லும் வழியைக் காப்பதற்குக் கெருபுகளையும் சுற்றிச் சுழலும் சுடரொளி வாளையும் வைத்தார்.

**பதில்பாடல் :** என் தலைவரே! தலைமுறை தோறும் நீரே எங்கள் புகலிடம்.

## நற்செய்தி : மாற்கு 8 : 1 - 10

அந்நாள்களில் மீண்டும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். உண்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. இயேசு தம் சீடரை வரவழைத்து அவர்களிடம், "நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவுகொள்கிறேன். ஏற்கெனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவுமில்லை. நான் இவர்களைப் பட்டினியாக வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் தளர்ச்சி அடைவார்கள். இவர்களுள் சிலர் நெடுந்தொலையிலிருந்து வந்துள்ளனர்" என்று கூறினார். ற்கு அவருடைய சீடர்கள், "இப்பாலைநிலத்தில் இவர்களுக்குப் போதுமான உணவு அளிப்பது எப்படி?" என்று கேட்டார்கள். அப்போது அவர் அவர்களைப் பார்த்து, "உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?" என்று கேட்டார். அவர்கள் "ஏழு" என்றார்கள். தரையில் அமர மக்களுக்கு அவர் கட்டளையிட்டார் பின்பு அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, பரிமாறும்படி தம் சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்கு அளித்தார்கள். சிறு மீன்கள் சிலவும் அவர்களிடம் இருந்தன. அவற்றின்மீது அவர் ஆசிகூறிப் பரிமாறச் சொன்னார். அவர்கள் வயிறார உண்டார்கள். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். அங்கு இருந்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம் பேர். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார் உடனடியாகத் தம் சீடருடன் படகேறித் தல்மனுத்தா பகுதிக்குச் சென்றார்.

**தியானம்:** தம்மைப் படைத்தவரைப் போலவே தாமும் ஆகிவிட ஆசைகொண்ட ஆதிப்பெற்றோர், சாத்தானின் ஆலோசனைப்படி கடவுளின் கட்டளையை மீறிவிடுகின்றனர். இந்தக் கட்டளை மீறலுக்கு இருவருமே காரணமானவர்கள்தான். ஆனால், கடவுள் அவர்களிடம் வினவியபோது அவர்கள் ஒருவரையொருவர் குற்றம் கூறியது மட்டுமல்ல, "என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள்" என்று கடவுளிடமே பழியைச் சுமத்தப் பார்ப்பதை நாம் இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம். தவறுவது மனித இயல்பு. செய்த தவறை நியாயப்படுத்த முயல்வது சாத்தானின் இயல்பு. தொடர்ந்தும் நம்மைப் பாவத்திலே மூழ்கடிக்க சாத்தான் நமக்குச் சொல்லித்தரும் மந்திரம் அது. அன்று பசியாய் இருந்த மக்கள் கூட்டத்தின்மீது பரிவுகொண்ட இறைமகன், பாவச்சேற்றில் வீழ்ந்திருந்த மனிதகுலத்தை மீட்கத் தம் ஒரே மகனை பலியிடச் சித்தமான தந்தையின் எல்லையற்ற இரக்கப் பெருக்கைப் பிரதிபலிக்கின்றார். கடவுள் தனது மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற தமது ஒரே மகனை மனிதனாக இவ்வுலகுக்கு அனுப்பிவைத்தார். மனிதனாகப் பிறந்த இறைமகனும், தமது மீட்பின் பாதையில் நாமும் பங்குகொள்ள வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக "உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?" என்று கேள்வியெழுப்புகின்றார். அவர்களிடமிருந்த ஏழு அப்பங்களை அவர் பலுகச் செய்து பெருந்திரளான மக்களுக்கு உணவளித்த இறைமகன் "ஒருவரையொருவர் குறைகூறி முறையீடு செய்வதற்குப் பதிலாக, நம் உடமைகளையும், திறமைகளையும் மற்றவரோடு பகிர நாம் தயாராகும்போது கடவுள் அவற்றை நிறைவாக்கிக் குறை நீக்குகின்றார் என்பதை நமக்கு இன்று கற்றுத் தருகின்றார். "பிறர் வாழ நம்மைத் தருவதே, மனித குலம்வாழ இறைவன் கற்றுத் தந்த மந்திரம்".